# யூலை – 24 – புதன்

## புனித சார்பெல் மாக்லூப் - மறைப்பணியாளர்

## தம் விருப்பம்போல் உணவு கேட்டு வேண்டுமென்றே இறைவனைச் சோதித்தனர். திபா. 78:18

---

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 16:1–5,9–15

இஸ்ரயேல் மக்களின் கூட்டமைப்பினர் அனைவரும் ஏலிமிலிருந்து புறப்பட்டு ஏலிம், சீனாய் இவற்றிற்கிடையேயுள்ள சீன் பாலைநிலத்தை வந்தடைந்தனர். இவர்கள் எகிப்து நாட்டினின்று வெளியேறி வந்த இரண்டாம் மாதம் பதினைந்தாம் நாள் அது.இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பினர் அனைவரும் அந்தப் பாலைநிலத்தில் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தனர்.இஸ்ரயேல் மக்கள் அவர்களை நோக்கி, "இறைச்சிப் பாத்திரத்தின் அருகில் அமர்ந்து, அப்பம் உண்டு நிறைவடைந்து, எகிப்து நாட்டிலேயே ஆண்டவர் கையால் நாங்கள் இறந்திருந்தால் எத்துணை நலமாயிருந்திருக்கும்! ஆனால் இந்தச் சபையினர் அனைவரும் பசியால் மாண்டு போகவோ இப்பாலைநிலத்திற்குள் நீங்கள் எங்களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்" என்றனர். அப்போது ஆண்டவர் மோசேயை நோக்கி, "இதோ பார்! நான் உங்களுக்காக வானத்திலிருந்து அப்பத்தைப் பொழியப் போகிறேன். மக்கள் வெளியே போய்த் தேவையானதை அன்றன்று சேகரித்துக்கொள்ள வேண்டும். என் கட்டளைப்படி நடப்பார்களா இல்லையா என்பதை நான் இவ்வாறு சோதித்தறியப் போகிறேன். ஆனால் ஆறாம் நாளில், நாள்தோறும் அவர்கள் சேகரித்து வந்ததைவிட இருமடங்கு சேகரித்துத் தயாரித்து வைத்துக் கொள்ளவேண்டும்" என்றார். மோசே ஆரோனிடம், "நீர் இஸ்ரயேல், மக்கள் கூட்டமைப்பு முழுவதையும் நோக்கி, ஆண்டவர் திருமுன் அணுகிச் செல்லுங்கள் ஏனெனில் அவர் உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டுள்ளார் என்று சொல்லும்" என்றார். அவ்வாறே ஆரோனும் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பு முழுவதையும் நோக்கிப் பேசிக் கொண்டிருக்கையில், அவர்கள் பாலை நிலப்பக்கமாய்த் திரும்பினார்கள். அப்போது ஆண்டவரின் மாட்சி மேகத்தில் தோன்றியது. ஆண்டவர் மோசேயை நோக்கி, "இஸ்ரயேல் மக்களின் முறையீடுகளை நான் கேட்டுள்ளேன். நீ அவர்களிடம், "மாலையில் நீங்கள் இறைச்சி உண்ணலாம். காலையில் அப்பம் உண்டு நிறைவடையலாம். நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர் என்பதை இதனால் நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்" என்று சொல்" என்றார். மாலையில் காடைகள் பறந்து வந்து கூடாரங்களை மூடிக்கொண்டன. காலையில் பனிப்படலம் கூடாரத்தைச் சுற்றிப் படிந்திருந்தது. பனிப்படலம் மறைந்தபோது பாலைநிலப்பரப்பின்மேல் மென்மையான, தட்டையான, மெல்லிய உறைபனி போன்ற சிறிய பொருள் காணப்பட்டது.இஸ்ரயேல் மக்கள் அதைப் பார்த்துவிட்டு, ஒருவரை ஒருவர் நோக்கி "மன்னா" என்றனர். ஏனெனில், அது என்ன என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அப்போது மோசே அவர்களை நோக்கி, "ஆண்டவர் உங்களுக்கு உணவாகத் தந்த அப்பம் இதுவே.

**பதில்பாடல் :** ஆண்டவர் அவர்களுக்கு வானத்து
உணவை வழங்கினார்.

## நற்செய்தி : மத்தேயு 13 : 1 – 9

அக்காலத்தில், இயேசு வீட்டிற்கு வெளியே சென்று கடலோரத்தில் அமர்ந்தார். மக்கள் பெருந்திரளாய் அவரிடம் ஒன்றுகூடி வந்தனர். ஆகவே அவர் படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தனர். அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றைக் குறித்து அவர்களோடு பேசினார்" விதைப்பவர் ஒருவர் விதைக்கச்சென்றார். அவர் விதைக்கும்பொழுது சிலவிதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டன. வேறு சிலவிதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப்பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. ஆனால் கதிரவன் மேலே எழ, அவை காய்ந்து, வேரில்லாமையால் கருகிப்போயின. மற்றும் சிலவிதைகள் முட்செடிகளின் இடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிட்டன. ஆனால் இன்னும் சிலவிதைகள் நல்லநிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறுமடங்காகவும் சில அறுபதுமடங்காகவும் சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்" என்றார்.

**தியானம்:** இன்றைய வாசகத்தில் நம் வாழ்வின் வெற்றிக்கு எது சரியான வழி? என்பதற்கான உதாரணத்தைத் தான் இங்கு வாசகிக்கின்றோம். விதைப்பவர் நிலத்தில் அறுபது மடங்கு மற்றும் நூறு மடங்கு பலன் கொடுக்கும் நிலத்தைப் பார்ப்போம். அந்த நிலத்தில் விழுந்த விதைகளை அந்த நிலமானது தனக்குள்ளே ஏற்றுக் கொள்ளுகின்றது. தனது முழு ஆற்றலையும் சக்தியையும் அந்த விதை வளர்வதற்கு கொடுக்கின்றது. எப்படியும் அந்த விதை அதற்கான பலனைக் கொடுக்க வேண்டும் என்று தன்னையே அந்த நிலம் தியாகமாகக் கொடுக்கின்றது. விதை விதைத்து பலன் தருகின்றபோது அந்த நிலத்தை யாரும் கண்டு கொள்வதில்லை அறுவடையிலும் அதன் மகிழ்ச்சியிலும் தான் முழுமையான கவனம் கொண்டிருப்பார்கள். ஆனால் அதனைப்பற்றி அந்த விதை கவலைப்படாமல் தாழ்ச்சியோடு இருக்கின்றது. நாமும் உள்ளம் அப்படிப்பட்ட அந்த நிலமாக் இருக்க வேண்டும். பல நல்ல சிந்தனைகள் நமக்குள்ளே விதைக்கப்படுகின்றது. அது எங்கிருந்து வந்தாலும் திறந்த உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ளுகின்ற போது அது நமக்குள்ளே ஆழமாக வேரூன்ற தொடங்குகின்றது. அதற்கு நம்மையே முழுமையான கையளிக்க வேண்டும். நமக்குள்ளாக விதைக்கப்படுகின்ற சிந்தனைகள் நமக்குள்ளே மூழ்கிவிடாமல் தொடர்ந்து அது நம்மில் பலன் தர நாம் முயற்சி எடுக்க வேண்டும். நம்மையே அதற்கு முழுவதுமாக ஒப்படைக்க வேண்டும். இறுதியில் நமது வாழ்வு பல மடங்கு பலன் தருவதை நம்மால் பார்க்க முடியும். அதற்கு நாம் பல சிந்தனைகளுக்கு திறந்த உள்ளத்தோடு செவிமடுத்து உள்வாங்கி பலன்தர முயற்சி எடுப்போம ஆமென்.